**Royal Commission**
**into Aged Care Quality and Safety**

TAMIL

**முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ராயல் ஆணையம்**

## (The Royal Commission into Aged Care Quality and Safety)

முதியோருக்கான பராமரிப்புச் சேவைகளின் தரத்தையும், அத்தகைய சேவைகள் ஆஸ்திரேலிய சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறதா என்பதையும் பார்வையிட 'முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ராயல் ஆணையம்' அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பின்வருபவை அடங்கும்:

- வீட்டில் வசிக்கும் வயதானவர்களைப் பராமரித்தல்
- மறதிநோயுடன் வாழுபவர்கள், மற்றும்
- உடல் ஊனமுற்ற இளைஞர்கள் உட்பட முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வாழுபவர்கள்.

நகரங்களிலும், அத்துடன் வட்டார மற்றும் தொலைதூரப் பகுதிகளிலும்  வழங்கப்படும் பராமரிப்பை இந்த ஆணையம் ஆராயும். எதிர்காலத்தில் முதியோர் பராமரிப்புச் சேவைகளை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதை அது கவனிக்கும்.

உங்களது நல்ல அனுபவங்கள் மற்றும் மோசமான அனுபவங்கள் இரண்டினையும் இந்த ஆணையம் செவிமடுக்க விரும்புகிறது. அத்துடன் அது முதியோர் பராமரிப்பு முறையினை மேம்படுத்தும் வழிமுறைகளுக்கான உங்கள் யோசனைகளையும் வேண்டுகிறது. நீங்கள் உங்கள் கருத்துக்களை ஆணையத்திடம் பின்வரும் முறைகளில் தெரிவிக்கலாம்:

- தொலைபேசி அழைப்பு: 1800 960 711 (காலை 8:00 முதல் இரவு 8:00 வரை AEDT திங்கட்கிழமை – வெள்ளிக்கிழமை, பொது விடுமுறை நாட்கள் தவிர). மொழிபெயர்த்துரைப்பாளர் சேவைகள் உண்டு.
- எழுதி அனுப்புதல்: அஞ்சல் பெட்டி எண் 1151, அடிலெய்டு, தெற்கு ஆஸ்திரேலியா 5001 (நாங்கள் உங்கள் கடிதத்தை மொழிபெயர்ப்போம்)
- இணையவழிப் படிவத்தினை நிரப்புதல்: https://agedcare.royalcommission.gov.au/submissions/Pages/default.aspx
- மின்னஞ்சல் மூலம்: ACRCenquiries@royalcommission.gov.au

**முதியோர் பராமரிப்புச் சேவையில் உங்களுக்குப் பிரச்சினை எதுவும் இருந்து அதன்மேல் உடனடி நடவடிக்கை தேவைப்படுவதாக இருந்தால்**

தனிப்பட்ட தகராறுகள் அல்லது புகார்களை ராயல் ஆணையம் தீர்க்க முடியாது. குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கும்படியோ அல்லது இழப்பீட்டுத் தொகை வழங்கும்படியோ ஒரு பராமரிப்பு வழங்குபவருக்கு அல்லது ஒரு நபருக்கு அது உத்தரவிட முடியாது. இருப்பினும், 'முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணைய'மானது, அரசாங்க மானியம் வழங்கப்படும் முதியோர் பராமரிப்பு சேவைகளுக்கான புகார் முகமையாக இருப்பதால், இந்தச் சூழ்நிலையில் அதனால் உதவிட முடியும்.

Royal Commission
into Aged Care Quality and Safety

TAMIL

தற்போது ஒருவருக்கு வழங்கப்படும் முதியோர் பாதுகாப்பு சேவைகளின் தரத்தைப் பற்றி நீங்கள் புகார் செய்ய விரும்பினால், ‘முதியோர் பராமரிப்புத் தரம் மற்றும் பாதுகாப்பு ஆணைய’த்துடன் 1800 951 822 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் அல்லது agedcarequality.gov.au என்ற இணையதளத்திற்குச் செல்லலாம். மொழிபெயர்த்துரைப்பாளர் சேவைகள் உண்டு.